**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 219/2021**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முருகன்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **வீரணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(11.08.2025)**
**முதல் விசாரணை**

நான் எழியார்பத்தியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ராமாயி என்பவர் எனது பக்கத்து வீட்டைச் சார்ந்தவர் ஆவார். கடந்த 02.07.2017 அன்று மதியம் 2 மணியளவில் எங்கள் ஊர் கோப்பம்மாள் கோவில் அருகே உள்ள வேப்பமர நிழலில் இறந்துபோன ராமாயி என்பவர் படுத்திருந்தார். வண்டி எண் 3013 என்ற எண் கொண்ட டொயோட்டோ காரானது ரிவர்ஸ் எடுக்கும் போது படுத்திருந்த ராமாயி மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அதே காரில் ராமாயியை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்த சென்ற போது மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு ராமாயி இறந்துவிட்டதாக கூறினார்கள். மேற்படி டொயோட்டோ காரை யார் ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது.ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியாது.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 02.07.2017 அன்று 2 மணியளவில் எங்கள் ஊர் கோப்பம்மாள் கோவில் அருகே எங்கள் ஊர் ராமன்

வீட்டு விஷேசத்திற்கு வந்துவிட்டு TN 59 AQ 3013 என்ற டவேரா காரை ஆஜர் எதிரி ரிவர்ஸ் எடுத்து அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி மேற்படி கோப்பம்மாள் கோவில் அருகே வேப்பமரத்து நிழலில் படுத்திருந்த ராமாயி மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் சம்பவயிடத்திற்கு போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு அவர்களுடன் செல்லவில்லை. காவல் நிலையத்திற்கும் செல்லவில்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 219/2021**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பால்ராஜ் | Caste | : |
| Father Name/ Husband Name | : மூக்கன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(11.08.2025)**

**முதல் விசாரணை**

நான் எழியார்பத்தியில் குடியிருந்து வருகிறேன். நான் வாட்ச்மேனாக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 03.07.2017 அன்று மதியம் எங்கள் ஊரில் உள்ள கோப்பம்மாள் கோவில் அருகே உள்ள வேப்பமரம் அருகே ராமாயி என்பவருக்கு முதல் நாள் ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக போலிசார் மேற்படி சம்பவயிடத்தில் வைத்து படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். என்னுடன் நாகராஜ் என்பவரும் பார்வை மகசரில் கையெழுத்து போட்டார். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

வழக்கில் இறந்துபோனவர் எனது பங்காளி என்றால் சரிதான். எனக்கு மறுநாள் தான் விஷயம் தெரியும் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்துபோட்டேன் என்று சொன்னாலும் இறந்தவர் எனது பங்காளி என்பதாலும் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெற்றுபேப்பரில் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல.